செ.வெ.எண்.295 நாள்.05.04.2018.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பள்ளி வாகனங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பரிசோதனை மற்றும் பள்ளி வாகன ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பள்ளி வாகனங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பரிசோதனை மற்றும் பள்ளி வாகன ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று **(05.04.2018)** திருநெல்வேலி மண்டல வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெற்றது.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது– திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளின் மாணவ, மாணவிகளை ஏற்றி செல்லும் வாகனங்களை நடைமுறைப்படுத்தும் பரிசோதனை இன்று நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை பள்ளி வாகனங்கள் மூலம் எவ்வித அசம்பாவிதமின்றி இயக்கிய பள்ளி வாகன ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிக்கு செல்லும் குழந்தைகளை பாதுகாப்புடன் அழைத்து செல்வது பள்ளி வாகனங்களின் ஓட்டுநர்களின் தலையான கடமையாகும். வாகனத்தினை இயக்கும் போது சாலை விதிகளை தவறாமல் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக செல்போன்களில் பேசிக் கொண்டு வாகனங்களை ஓட்டுவதும், சீட் பெல்ட் அணியாமல் வாகனங்களை ஓட்டுவதும் குற்றச் செயலாகும். மேலும், அதிவேகமாக வாகனத்தினை இயக்காமல், பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு கருதி, மிக கவனமாக வாகனங்களை இயக்க வேண்டும். பள்ளியில் பயிலும் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு குழந்தைகளின் பாதுகாப்பு கருதி வாகனத்தில் ஏறும் போதும், இறங்கும் போதும் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். முதலுதவி பெட்டி, தீயணைப்பு கருவி போன்ற பாதுகாப்பு கருவிகள் மற்றும் வேக கட்டுப்பாடு கருவிகள் கண்டிப்பாக வாகனத்தில் பொருத்திருக்க வேண்டும். பள்ளி வாகனங்களில் அவசரகால வழி, வாகனத்தின் உரிது தன்மையினையும் கடைப்பிடிக்க வேண்டும். பள்ளி வாகனங்கள் மஞ்சள் நிறத்துடன் கூடிய வண்ணத்திலும், வாகனங்கள் கட்டமைப்பு மற்றும் உறுதித்தன்மை போன்ற 16 வகையான பள்ளி வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட அரசின் விதிகளை கடைபிடித்தால் மட்டுமே பள்ளி வாகனங்களை இயக்க அனுமதி அளிக்க முடியும்.

மேலும், வாகன நடைமுறைகளில் விதித்துள்ள சட்ட, திட்டங்களுக்கு உட்பட்டு வாகனங்களை ஓட்டுநர்கள் இயக்க வேண்டும். எத்தனையோ பள்ளிக் குழந்தைகளை ஓட்டுநர்களாகிய நீங்கள் அழைத்து சென்று வருகீறிர்கள். அந்த பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பில் முழு கவனம் செலுத்தி வாகனங்களை இயக்க வேண்டுமென தெரிவித்தார்.

முன்னதாக, பள்ளிக் குழந்தைகளின் வாகன ஓட்டுநர்கள் சாலை பாதுகாப்பு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஏற்றுக் கொண்டனர். பள்ளி வாகன ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு தீயணைப்பு கருவியினை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக தீயணைப்புத் துறையினர் செயல்விளக்கம் அளித்தனர். மேலும், திருநெல்வேலி மண்டல வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 28 பள்ளிகளுக்கான 204 வாகனங்களும், வள்ளியூரில் 41 பள்ளிகளின் 229 வாகனங்களுக்கான பரிசோதனை இன்று தொடங்கி நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவிலில் 45 பள்ளிகளில் 197 வாகனங்களுக்கும், தென்காசி 56 பள்ளிகளில் 229 வாகனங்களுக்கும், மற்றும் அம்பாசமுத்திரம் 30 பள்ளிகளில் 131 வாகனங்களுக்கும், அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பள்ளி வாகனங்களுக்கு தர பரிசோதனை நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திருமதி.சசி, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.மாணிக்கம், திரு.சரவணன், திருமதி.பத்மபிரியா மற்றும் பள்ளி வாகன ஓட்டுநர்கள், நடத்துனர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.